## மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் நிறைவு:

# கோயம்பேட்டில் இருந்து வடபழனி வழியாக வெளியூர் பஸ் சேவை

## அரசு விரைவு போக்குவரத்து கழகம் அறிவிப்பு

சென்னை, ஜூன்.21–

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் சார்பில் மதுரை, திருச்சி, நெல்லை, நாகர்கோவில், தூத்துக்குடி, திருவனந்தபுரம், சேலம், கோவை, தஞ்சை என முக்கிய ஊர்களுக்கு தினமும் இயக்கப்படும் பஸ்கள் அனைத்தும் கோயம்பேடு எம்.ஜி.ஆர். பஸ் நிலையத்தில் இருந்து வடபழனி, அசோக்பில்லர், ஆலந்தூர், குரோம்பேட்டை, தாம்பரம் வழியாக இயக்கப் பட்டு வந்தன.

இந்தநிலையில் சென்னையை சுற்றிலும் உள்ள உள்புற வழிச் சாலையில் மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் பல்வேறு கட்டங்களாக செயல்பட்டு வந்ததின் காரணமாக; அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்படுகிற தொலைதூர பஸ்கள் போலீசாரின் அறிவுறுத்தலின்படி மதுரவாயல் புறவழிச்சாலை 'வழியாக இயக்கப்பட்டு வந்தது.

தற்போது மெட்ரோ ரெயில் திட்டத்தின் கீழ் மேற்கொள் ளப்பட்டு வந்த பணிகள் கோயம்பேடு முதல் மீனம்பாக்கம் விமான நிலையம் வரையில் முடிவுவடைந்து உள்ளது.

இதைத்தொடர்ந்து அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் நெடுந்தூரங்களுக்கு இயக்கப்பட்டு வரும் அனைத்து பஸ்களும் (பிரீமியம் மற்றும் ஹை–வே ரைடர் பஸ்கள் தவிர்த்து) இனி காலை 10 மணி முதல் மாலை 4.30 வரையிலும் மற்றும் இரவு 9.30 மணி முதல் காலை 7 மணி வரையிலும் கோயம் பேடு எம்.ஜி.ஆர். பஸ் நிலையத்தில் இருந்து வடபழனி, அசோக்பில்லர், ஆலந்தூர், குரோம்பேட்டை, தாம்பரம் வழி யாக கடந்த மாதம் முதல் இயக்கப்படுகின்றன.

மேற்கண்ட தகவல் அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.